# உதூ

உதூ செய்வதில் பல சிறப்புக்கள் உள்ளன. இது ஒரு முஃமினுடைய வழக்கமாகவும் மறுமை நாளில் அவருடைய அடையாளமாகவும் இருக்கும். இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறுகிறார்கள்:

إِنَّ أُمَّتِي يُدْعَوْنَ يَوْمَ القِيَامَةِ غُرًّا مُحَجَّلِينَ مِنْ آثَارِ الوُضُوءِ، فَمَنِ اسْتَطَاعَ مِنْكُمْ أَنْ يُطِيلَ غُرَّتَهُ فَلْيَفْعَلْ

பொருள்: *மறுமை நாளன்று என்னுடைய உம்மத்தினர் அழைக்கப்படுவார்கள் அவர்கள் தங்களுடைய கை கால்கள் மற்றும் முகங்கள் உதூ செய்ததின் காரணமாகப் பிரகாசித்துக்கொண்டிருக்கும் நிலையில் வருவார்கள்* (புக்ஹாரி, முஸ்லிம்). உதூ செய்வதன் காரணமாக, ஒரு மனிதனுடைய பாவங்கள் குறைந்துவிடுகின்றன. இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறுகிறார்கள்:

إِذَا تَوَضَّأَ الْعَبْدُ الْمُؤْمِنُ، فَتَمَضْمَضَ خَرَجَتِ الْخَطَايَا مِنْ فِيهِ وَإِذَا اسْتَنْثَرَ خَرَجَتِ الْخَطَايَا مِنْ أَنْفِهِ، فَإِذَا غَسَلَ وَجْهَهُ خَرَجَتِ الْخَطَايَا مِنْ وَجْهِهِ، حَتَّى تَخْرُجَ مِنْ تَحْتِ أَشْفَارِ عَيْنَيْهِ، فَإِذَا غَسَلَ يَدَيْهِ خَرَجَتِ الْخَطَايَا مِنْ يَدَيْهِ، حَتَّى تَخْرُجَ مِنْ تَحْتِ أَظْفَارِ يَدَيْهِ. فَإِذَا مَسَحَ بِرَأْسِهِ خَرَجَتِ الْخَطَايَا مِنْ رَأْسِهِ، حَتَّى تَخْرُجَ مِنْ أُذُنَيْهِ. فَإِذَا غَسَلَ رِجْلَيْهِ خَرَجَتِ الْخَطَايَا مِنْ رِجْلَيْهِ، حَتَّى تَخْرُجَ مِنْ تَحْتِ أَظْفَارِ رِجْلَيْهِ.» قَالَ: «ثُمَّ كَانَ مَشْيُهُ إِلَى الْمَسْجِدِ وَصَلَاتُهُ نَافِلَةً لَهُ مالك، أحمد )

பொருள்: *ஒரு முஃமினான அடியான் உதூ செய்யும் சமயத்தில் அவன் வாய் கொப்பளிக்கும்போது அவனுடைய குற்றங்கள் வாய்வழியாக வெளியேறி விடுகின்றன. அவன் தன்னுடைய மூக்கைச் சுத்தம்செய்யும்போது அவனுடைய குற்றங்கள் மூக்கு வழியாக வெயேறிவிடுகின்றன. அவன் தன்னுடைய முகத்தைக் கழுவும்போது அவனுடைய குற்றங்கள் முகத்திலிருந்து வெளியேறிவிடுகின்றன, அவனுடைய கண் இமைகளுக்குக் கீழிருந்தும் அதன் குற்றங்கள் நீங்கிவிடுகின்றன. அவன் தன்னுடைய கைகளைக் கழுவும்போது அவனுடைய கைகளின் குற்றங்கள், அவனுடைய நகங்களின் கீழிருந்தும் குற்றங்கள் வெளியேறிவிடுகின்றன, அவன் தன்னுடைய தலையின் மீது மசஹ் செய்யும்போது அவனுடைய குற்றங்கள் தலையிலிருந்து வெளியேறிவிடுகின்றன, அவனுடைய காதுகளின் வழியாகவும் வெளியேறிவிடுகின்றன, அவன் தன்னுடைய கால்களைக் கழுவும்போது அவனுடைய குற்றங்கள் அவனுடைய கால்களிலிருந்தும், அவன் கால்விரல்களின் நகங்களின் கீழிருந்தும் குற்றங்கள் வெளியேறிவிடுகின்றன, எல்லாவற்றிற்கும் மேலாக, அவன் பள்ளிவாசலுக்கு நடந்துசெல்வது, அங்கே தொழுகை நிறைவேற்றுவது, அவனுக்குக் கூடுதலான நன்மையாக ஆகிவிடுகின்றது.*

www.uzairfalahi.com

(மாலிக், அஹ்மத்). உதூ செய்வதன் கதரணமாக நன்மைகள் அதிகரிக்கின்றன மற்றும் ஒருவருடைய அந்தஸ்தும் உயர்ந்துகொண்டே போகின்றது (முஸ்லிம்) உதூ ஷைத்தானிடமிருந்து பாதுகாப்புக்கான ஒரு வழியாகும் மற்றும் அவனிடமிருந்து தம்மைப்பாதுகாத்துக்கொள்வதற்கான புகலிடமாகும் (அஹ்மத்). ஒரு முஸ்லிம் அடியான் தூய எண்ணத்துடன் நல்ல விதமாக உதூ செய்துகொண்டு இந்த துஆவை ஓதினால்:

أَشْهَدُ أَنْ لاَ إِلَهَ إِلَّا اللَّهُ، وَحْدَهُ لاَ شَرِيكَ لَهُ وَأَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ

அவருக்காக சுவர்க்கத்தின் எட்டு வாயில்களும் திறக்கப்பட்டுவிடும், எதிலிருந்து வேண்டுமானாலும் அவர் சுவர்க்கத்திற்குள் பிரவேசிக்கலாம் (அஹ்மத், முஸ்லிம், அபூ தாவூத், நிசாயி). உதூவின் இந்த சிறப்பம்சங்களின் காரணமாகவே ஒரு முஃமினான அடியான் அதனைப் பேணுதலுடன் கடைபிடிக்கவேண்டும், குறிப்பாக கீழ்க்காணும் நேரங்களில்:

1 அல்லாஹ்வுடைய திக்ரு (தியானம்) செய்யும்போது

2 இரவில் தூங்குவதற்கு முன்பாக

3 ஒருவர் ஒட்டகத்தின் மாமிசத்தை உண்ணும்போது

4 மய்யித்திற்கு குளிப்பாட்டி முடிந்த பிறகு

**கீழ்க்காணும் நேரங்களில் உதூ செய்வது இன்றியமையாதது**

1 ஒருவர் தொழுகைக்காக முற்படும்போது

2 ஹஜ் அல்லது உம்ராவில் கஅபாவின் தவாஃப் செய்யும்போது

3 திருக்ஃகுர்ஆன் ஓத முற்படும்போது

**உதூவிற்கான நிபந்தனைகள்**

1 அறிவுப்பூர்வமான நிலையில் இருத்தல் (பைத்தியம் பிடித்த, மனநிலை குன்றிய, உணர்வற்ற மற்றும் தூங்கிக்கொண்டிருப்பவருடைய உதூ நிறைவேறாது)

2 பருவ வயது (குழந்தைகள்மீது உதூ கடமையல்ல)

3 முஸ்லிமாக இருத்தல்

4 தண்ணீர் பயன்படுத்தும் வசதி

5 உதூவிற்கான தேவை (உதூவைப் புதுப்பித்துக்கொள்வது கடமையல்ல)

6 மாதவிடாய் மற்றும் பிள்ளைப்பேறு இரத்தப்போக்கிலிருந்து தூய்மையடைந்திருப்பது

* * *

www.uzairfalahi.com